## IV. ஆளணி

ஆளுநர் திரு. டபிள்யூ. தென்னக்கோன் கோலாலம்பூரில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டிற் கலந்து கொள்ள 1968, பெப்புருவரி 12ஆந் திகதி இலங்கையைவிட்டுச் சென்று, 1968 பெப்புருவரி 20ஆந் திகதி மீண்டார்.

1968ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 1ஆந் திகதி தொட்டு மத்திய வங்கியின் ஆளுநராக, திரு. தென்னக்கோன் அவர்கள் மீண்டும் நியமிக்கப்பட்டார். பல்நாட்டு நாணய நிதியில் இலங்கையின் மாற்றீட்டு ஆளுநராகப் பணியாற்றும் ஆளுநர், பல்நாட்டு நாணய நிதியின் இலங்கை ஆளுநராகிய நிதியமைச்சர் மாண்புமிக்க யு. பி. வன்னிநாயக்க, பா. உ. உடன் வாசிங்ரனில் நடைபெற்ற பல்நாட்டு நாணய நிதியினதும், பல்நாட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுக் கூட்டங்களுக்குச் சென்றார். அவர் 1968 செத்தெம்பர் 19இல் இலங்கையைவிட்டுச் சென்று, 1968 ஒற்றோபர் 20ஆம் திகதி மீண்டார்.

ஆளுநர் நாட்டிலில்லாத மேற்கூறப்பட்ட காலப்பகுதியின்போது துணை ஆளுநர் திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ் நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 24ஆம் பிரிவிற் கிணங்க வங்கியின் முதன்மை நிறைவேற்றும் அலுவலாளராகக் கடைமையாற்றினர்.

உலக வங்கியினதும், நிதியினதும் கூட்டங்களிற் கலந்துகொள்வதற்காக நிதியமைச்சரின் நிரந்தரச் செயலாளர் திரு. எச். ஜே. சமரக்கொடி, இலங்கையில் இல்லாத காலத்திலும், 1968ம் ஆண்டு நவெம்பர் 15ல் இளைப்பாறுதற்கு முன்னேற்பாடான விடுப்பு நாட்களிலும் தேசிய சேவைகள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரான திரு. மு. இராசேந்திரா, நிதியமைச்சின் பதில் நிரந்தரச் செயலாளராகப் பணியாற்றியதோடு, அக்காலப்பகுதியின் நாணயச் சபையின் அரசகரும உறுப்பினராகவும் கடமையாற்றினர்.

முனைவர் (கலாநிதி) காமினி கொறியா தொடர்ந்தும் திட்ட அமைப்புப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளராக அரசாங்கப் பணியில் இருந்தார்.

பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளரான முனைவர் (கலாநிதி) டபிள்யூ. எம். திலகரத்தின அவர்கள், ஆளுநரின் உதவியாளராக 1968ம் ஆண்டு நவெம்பர்த் திங்கள் 15 முதல் நியமிக்கப்பட்டார்.

பொதுப்படுகடனின் மேற்பார்வையாளரான திரு. ஓ. பி. குணவர்த்தன அவர்கள், உட்டுறைக் கணக்காய்வாளராக 1968 நவெம்பர் 15 தொடக்கம் நியமிக்கப்பட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளரான திரு. ஜே. ஜி. பி. ஜயசுந்தர அவர்கள், வங்கி மேற்பார்வையின் பணிப்பாளராக 1968 நவெம்பர் 15ந் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டார்.

உட்டுறைக் கணக்காய்வாளரான திரு. சி. ஏச். பெர்னுண்டோ அவர்கள், செலாவணிக் கட்டுப்பாட்டாளராக 1968 நவெம்பர் 15 தொடக்கம் நியமிக்கப்பட்டார்.

சிறப்பு அலுவலாளரான திரு. பி. எச். சிறிவர்த்தன அவர்கள், பொதுப்படு கடனின் பதில் மேற்பார்வையாளராக 1968 நவெம்பர் 15 தொட்டு நியமிக்கப்பட்டார்.

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரான திரு. டபிள்யூ. பீ. அலுவிகார அவர்கள், வங்கித் தொழில் அபிவிருத்தி ஆலோசகராக 1968 நவெம்பர் 15 தொட்டு நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சியின் மூத்த துணைப் பணிப்பாளரான முனைவர் (கலாநிதி) டபிள்யூ. இராசபுத்திரம் அவர்கள், பொருளாதார ஆராய்ச்சிப் பதில் பணிப்பாளராக 1968 நவெம்பர் 15 தொடக்கம் நியமிக்கப்பட்டார். 1968ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் நடுப்பகுதி தொடக்கம் ஒரு திங்களுக்கு பாங்கொக்கில் நடைபெற்ற தூர கிழக்கு ஆசிய பொருளாதார ஆணைக் குழுவின் ஆலோசகர் குழுவிலும் இவர் பங்குபற்றினர்.

மாண். புமிக்க தலைமை அமைச்சரால் நியமிக்கப்பட்ட அரசாங்கப் பேராளரின் ஓர் உறுப்பினராக 1968 திசெம்பர் 11—14ல் பாங்கொக்கில் தூர கிழக்கு ஆசிய பொருளாதார ஆணைக்குழுவினல் ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிய பொருளாதாரக் கூட்டுறவின் மூன்றும் அமைச்சரவை மாநாட்டில் முனைவர் (கலாநிதி) டபிள்யூ. எம். திகலரத்தின பங்குபற்றினர்.

பல்நாட்டு நாணய நிதியில் திரு. எம். சுவாமிநாதனும், முனைவர் (கலாநிதி) எம். ஆர். பி. சல்காடோவும் தொடர்ந்து பணியாற்றினர்.

நேபால் இராஷ்டிர வங்கியில் ஆய்வு ஆலோசகராக திரு. எம். பி. பெரேரா அவர்கள், நாணய நிதியின்கீழ் பணியாற்றுவதற்கு 1968 மாச்சு 1ஆந் திகதி தொட்டு ஓராண்டு காலம் வங்கிப் பணியில் இருந்து விடுவிக்கப் பட்டார்.

திரு. சீ. ஏ. பி. என். ஜெயராசா அவர்கள், 1968, பெப்புருவரியில் கோலாலம்பூரில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மாநாட்டிற் பங்குபெற ஆளுநருடன் சென்றார். பாங்கொக்கிலுள்ள தூர கிழக்கு ஆசிய பொருளாதார ஆணைக் குழுவில் பதவியேற்பதற்கு 1968 மே 1 தொடக்கம் 1969 சனவரி 15 வரை வங்கிப் பணியிலிருந்து இவர் விடுவிக்கப்பட்டார். இவர், 1968 மாச்சில் புதுடெல்லியில் நடைபெற்ற இரண்டாம் ஐக்கிய நாடுகளின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டில் பங்குபற்றிய இலங்கைப் பேராளரின் ஒருவராகவும் விளங்கினர். 1968, செத்தெம்பர் 5—7ற்கிடையில் மலேசியாவில் ஜெரகேரா வங்கியினற் கூட்டப்பட்ட மத்திய வங்கி அலுவலாளரின் இரண் டாம் தொழில் நுட்பக் கூட்டத்திலும் இலங்கைப் பேராளர் உறுப்பினராகவும் விளங்கினர். அத்துடன் 1968 திசெம்பர் 4—6ற் கிடையில் பாங்கொக்கில் நடைபெற்ற தொன்கிழக்கு ஆசிய மத்திய வங்கிகளின் மூன்றும், தொழில்நுட்பக் குழுக்கூட்டத்திலும் பங்குபற்றினர்.

மீளப்பார்வையிடும் இவ்வாண்டில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலாளர்கள் அரசாங்கத்திற்குக் கடஞக வழங்கப்பட்டார்கள் அல்லது அரசாங்கத்தில் தொடர்ந்து பணியாற்றினர்கள். திருவாளர்கள் எம். எம். செனிவரத்தின, டி. ஆர். சிறிவர்த்தன, முனைவர் (கலாநிதி) என். இராமச்சந்திரன், முனைவர் (கலாநிதி) ஜி. உஸ்வத்தை ஆராய்ச்சி, திரு. என். எம். கப்பாகொட ஆகியோர் திட்டப் பொருளாதார அலுவல்கள் அமைச்சிலே தொடர்ந்து பணியாற்றுகிறார்கள்.

திரு. பி. பி. கரந்தவெல அவர்கள், நிதியமைச்சில் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள்.

1968 ஏப்பிறல் முதலிலிருந்து திறைசேரியிற் பணியாற்றுதற்கு திரு. எம். ஆர். டி சொயிசா விடுவிக்கப்பட்டார்.

சென்ற காலம்போல் மத்திய வங்கி அலுவலாளர்கள் பலர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களிலே தொடர்ந்து பணியாற்றினர்.